**05.07.2022**

**OS.No. 136/2020 DW : 1, திருமதி. சரளா**

**குறுக்கு விசாரணை...**

நான் பழையனூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். என் தரப்பில் ஆவணங்களை பெற்றுக்கொள்ள தாக்கல் செய்த மனுவில் நான் கல்லம்பேடு கிராமத்தில் குடியிருந்து வருவதாக செல்லியிருக்கிறேன். ஆனால் நான் பழையனூரில் தான் குடியிருக்கிறேன். என் மாமனார் என் கணவருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொத்து என் மாமனாருக்கு எப்படி கிடைத்தது என்று குறிப்பிடப்படவில்லை. ஆனால் சொத்து எப்படி வந்தது என்று தெரிந்து தான் ஆவணத்தை எழுதினோம். செட்டில்மெண்ட் ஆவண சொத்து என் மாமனார் பெயரியல் இருப்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் பட்டாவை தாக்கல் செய்துள்ளேன் பத்திரம் எதையும் தாக்கல் செய்யவில்லை. என் மாமனார் பெயரில் பத்திரம் எதுவும் இல்லை. செட்டில்மெண்ட் சொத்துக்கு என் மாமனாரின் தந்தையான வெங்கடாசலம் நாயகர் பெயரில் பத்திரம் எதுவும் இல்லை. நில உடமை பதிவேட்டில் சர்வே எண் 185 இருக்கிறது. நான் அதை தாக்கல் செய்யவில்லை. அவ்விதம் எங்கள் பெயரில் பட்டா இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 செட்டில்மெண்ட் பதிவேட்டின் நகலில் சர்வே எண் 185 இல்லை. தாவா சொத்து எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது இல்லை என்றும் அது வாதிகளுக்கு

S GANAPATHISAMY

Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.08 14:55:26 +0530

பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை சின்னா நாயகரும், கருப்புசெஞ்சி நாயகரும் சேர்ந்து வாங்கியதாக 30.04.1962ல் வாங்கினார்கள். கிரைய பத்திரத்தில் கருப்புசெஞ்சி நாயகர் பெயர் பெயரளவில் தான் இருக்கிறது என்றும் அவர் சொத்தை எப்பொழுதும் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. சின்னா நாயகர் இறந்த பின்னர் வாதிகள் தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. பட்டுசாமி நாயகர் இறந்தபின்னர் அவர் வாரிசுகளான 2 முதல் 5 வாதிகள் 1ம் வாதியுடன் சேர்ந்து தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1962முதலே வாதிகள் அனுபவத்தில் மட்டும் தான் இருந்தது என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் ஆண்கள் பிறந்தால் செஞ்சி என்றும், பெண்கள் பிறந்தால் செஞ்சியம்மாள் என்று பெயர் வைப்பார்கள். எங்கள் குடும்பத்தில் 3 செஞ்சி நாயகர்கள் இருக்கிறார்கள். 4ம் பிரதிவாதி சின்னதுரை என்பவரின் தந்தை பெயரும் செஞ்சி நாயகராகும். 7ம் பிரதிவாதி செஞ்சுகான் என்பவரின் காப்புகார செஞ்சி நாயகர் ஆகும். அந்த 2 செஞ்சி நாயகர்கள் பெயரை பயன்படுத்தி அந்த கருப்பு செஞ்சி நாயகரை 4ம் பிரதிவாதியின் தந்தை என்றும் நாங்கள் தவறுதலாக தாவா சொத்தில் உரிமை கோருகிறோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ5ல் கருப்பு செஞ்சி நாயகர் பெயர் இல்லை. 4ம் பிரதிவாதி கருப்புசெஞ்சி நாயகர் தன் தந்தை என்ற முறையில் அவரது தங்கைக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். கருப்பு செஞ்சி நாயகர் மகன் சின்னசாமி நாயகர் என்று செட்டில்மெண்ட்

S GANAPATHISAMY
Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.08 14:55:33 +0530

ஆவணத்தை எழுதி வைத்தார். ஆனால் சின்னசாமி நாயகர் கருப்புசெஞ்சி நாயகரின் தம்பி ஆவார். 4 மற்றும் 7 பிரதிவாதிகள் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணங்கள் செல்லாது என்றால் சரியல்ல. 4 மற்றும் 7 பிரதிவாதிகள் அந்த 2 செட்டில்மெண்ட் ஆவணங்களை தவிர அதற்கு முன்பு அவர்கள் எழுதிக்கொடுத்த மற்ற ஆவணங்களில் அவர்களின் தந்தை பெயர் கருப்புசெஞ்சி நாயகர் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை அபகரிப்பதற்காக இந்த 2 செட்டில்மெண்ட் ஆவணங்களில் மட்டும் தந்தை பெயர் கருப்புசெஞ்சி நாயகர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணங்களை பயன்படுத்தி தாவா சொத்தில் வீடுகட்ட 2019ல் நாங்கள் ஆரம்பித்தோம் என்றும் அப்போது தான் பிரச்சனை ஆரம்பித்தது என்றால் சரியல்ல. அதற்கு முன்பு தாவா சொத்தில் எந்த வீடும் இல்லை என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணத்தில் சென்ட் கணக்கில் தான் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஏற்கனவே வீடு இல்லை என்றும் செட்டில்மெண்ட் ஆவணத்தில் வீடு அதன் கதவு எண், மின் இணைப்பு எண் ஆகியவற்றை காட்டாமல் விவசாய நிலமாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் வீடு கட்ட முயற்சி செய்யும் வரை வாதிகளுக்கு தாவா செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி தெரியாது என்றால் சரியல்ல. 15.10.2019ல் நில அபகரிப்பு பிரிவில் வாதிகள் பிரதிவாதிகள் பெயரில் புகார் கொடுத்தார்கள். காவல் நிலையத்தில் சின்னா நாயகர்

S
GANAPATHISAMY
Digitally signed by
S
GANAPATHISAMY
Date: 2022.07.08
14:55:45 +0530

இறப்பு சான்றிதழையும், கருப்பு செஞ்சி நாயகர் இறப்பு சான்றிதழையும் அந்த இருவரின் வாரிசு சான்றிதழ்களையும் கொண்டுவர சொன்னார்கள். சின்னா நாயகர் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ்கள் வாதிகள் கொடுத்தார்கள் என்றும் நாங்கள் அவ்விதம் சான்றிதழ்களை கொடுக்கவில்லை என்றால் போலீஸார் எங்களை நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார்கள். கருப்புசெஞ்சி நாயகரின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழையோ இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. ஆனால் அதை கேட்டு விண்ணப்பம் செய்திருக்கிறோம். சர்வே எண்ணை எப்படி உட்பிரிவுசெய்தார்கள் என்று கேட்டால் 1962 கிரைய ஆவணத்தை வைத்து உட்பிரிவு செய்தார்கள். சின்னா நாயகருக்கு 2 மகன்கள் தான் அவர்கள் பட்டுசாமி மற்றும் துரைக்கண்ணு ஆவார்கள். வா.சா.ஆ.12 பட்டாவில் கருப்பு செஞ்சி நாயகர் பெயர் இல்லை என்றும் பட்டாவிலும் தில்லுமுல்லு செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. சின்னா நாயகர் வாரிசுகளும் கருப்பு செஞ்சி நாயகர் வாரிசுகளும் வாய்வழியாக தாவா சொத்தை 1995ல் பிரித்துக்கொண்டார்கள். 1970ல் சின்னா நாயகரும் கருப்பு செஞ்சி நாயகரும் சொத்துக்களை பிரித்துக்கொண்டதாக எதிர்வழக்குரையில் சொல்லியிருந்தால் 1995ல் தான் பிரித்துக்கொண்டார்கள். நான் சொல்லும் எந்த பாகமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. காப்புகார செஞ்சி நாயகருக்கு 3 மகன்கள். காப்புகார செஞ்சி நாயகருக்கு 4 மகன்கள் என்று சொன்னால் சரியல்ல. காப்புகார செஞ்சி நாயகருக்கு 4 வாரிசுகள்

S GANAPATHISAMY
Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.08 14:55:53 +0530

என்றும் அவர்கள் வெங்கடாசலம் நாயகர், சின்னதுறையின் தந்தையான செஞ்சி நாயகர், சின்னசாமி நாயகர் மற்றும் சரோஜாவின் தந்தையான செஞ்சி நாயகர் என்றும் சொன்னால் அந்த சரோஜாவின் தந்தையான செஞ்சி நாயகர் முன்னரே இறந்துவிட்டார் நாங்கள் சொத்துக்காக சரோஜா என்பவரையே மறைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. கருப்புசெஞ்சி நாயகர், சின்னசாமி நாயகர் மற்றும் வெங்கடாசலம் நாயகர் தலா 15 சென்ட் பிரித்துக்கொண்டதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. என் மாமனாரின் தந்தையான வெங்கடாசலம் நாயகர் 1959ம் வருடமே இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதனால் தான் தாவா சொத்து அவரது தம்பியான கருப்புசெஞ்சி நாயகர் கிரையம் வாங்கினார். நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. வெங்கடாசலம் நாயகருக்கு 4 வாரிசுகளை என் முதல் விசாரணையில் காட்டியிருக்கும்போது என் மாமனாருக்கு மட்டும் 15 சென்ட் கொடுத்துவிட்டதாக நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. ராதாவும் என் மாமனாரின் தம்பி ஆவார். அவருக்கு ஊருக்குள் வேறு சொத்தை கொடுத்துவிட்டதால் 15 சென்ட்டில் அவருக்கு பங்கு இல்லை. எங்களுடைய கோரிக்கை தவறு என்பதால் ராதா, சரோஜா என்பவர் எங்களுடன் வரவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் 3வது பாராவில் வெங்கடாசல நாயகர் கருப்பு செஞ்சி நாயகர், சின்னசாமி நாயகர் அவர்கள் தங்களின் பிள்ளைகளுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளதாக கூறியிருக்கிறேன். வெங்கடாசல நாயகர் செட்டில்மெண்ட்

S GANAPATHISAMY
Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.08 14:56:00 +0530

ஆவணம் எதுவும் எழுதவில்லை. தாவா சொத்தில் ரோடுக்கு நிலம் எடுத்தார்கள். நிலத்தை எடுத்ததற்கு யார் பெயருக்கு அறிவிப்பு வந்தது என்றும் யார் நஷ்டஈடு வங்கினார்கள் என்றும் முதல் விசாரணையில் குறிப்பிடப்படவில்லை. துறைக்கண்ணு நாயகரின் சகோதரிகள் 50 வருடத்திற்கு முன்பே இறந்துவிட்டார்கள் என்றும் ஆகவே வழக்கில் சேர்க்காதது வழக்கை பாதிக்காது என்றால் சரியல்ல. பிராதுபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

S GANAPATHISAMY
Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.08 14:56:07 +0530

I Additional District and Sessions Judge,
Tiruvallur.